| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>கோவிந்தராஜன், த/பெ பரதேசி | அ.வ.எண்.306/2017 | 03.07.2026 |

<u>**குறுக்கு விசாரணை**</u>

1. எனது மனைவி பெயரில் இருந்த சொத்தை வேறு நபர்கள் அவர்களது பெயரில் பத்திரம் ஏற்படுத்தியதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் மேற்படி விவரம் பற்றி சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் ஆவணங்களை படித்து பார்த்து தான் தாக்கல் செய்வேன் என்றால் சரிதான். மாவட்ட பதிவாளருக்கு பத்திரங்களை ரத்து செய்யும் அதிகாரம் இல்லை என்பதும், மேற்படி அதிகாரம் நீதிமன்றத்திற்கு மட்டுமே உள்ளது என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான்.
2. தாவா சொத்துக்களை ராதிகா தான் சாகுபடி செய்துவருகிறார் என்றால் இல்லை. நாங்கள் தான் சாகுபடி செய்துவருகிறோம். மேற்படி ராதிகா தான் தாவா சொத்தில் கிரையம் பெறுவதற்கு முன்பும், அதற்கு பின்னிட்டும் சாகுபடி செய்துவருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சாகுபடி செய்துவருவதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, செய்துள்ளேன். நான் சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஊருக்கும் வந்து செல்வேன்.

3. தாவா சொத்திற்கு நான்கெல்லை தெரியுமா என்றால் கிழக்கில் கணேசன் மற்றும் கன்னி வாய்க்கால், மேற்கில் கன்னி வாய்க்கால் மற்றும் தங்கராஜ் நிலம், தெற்கில் ஆச்சிமுத்து நிலம், வடக்கில் அண்ணாமலை நிலம் உள்ளது. நான் சொல்வது போல் தாவா சொத்தை நான் கிரையம் வாங்கவில்லை என்றாலும், அதனால் தான் பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து ராதிகாவின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றாலும் நான் வழக்கிற்காக அவரது அனுபவத்தில் இல்லை என் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த ஆண்டும் ராதிகா தான் சாகுபடி செய்து நெல்லை விற்பனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.339/2017–ல் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ராதிகாவின் குடும்பத்திற்கும், எங்கள் குடும்பத்திற்கும் முன் விரோதம் காரணமாக பொய்யாக வழக்கு மூலத்தைகுறிப்பிட்டு நான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

**Signed,**
கோவிந்தராஜன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.